## மே– 01 – செவ்வாய்

### தொழிலாளர் பாதுகாவலர் புனித சூசையப்பர்

### “ஆண்டவரே, நீர் உருவாக்கிய யாவும் உமக்கு நன்றி செலுத்தும்”- திபா 145 : 10

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி 14 : 19 – 28

அக்காலத்தில் அந்தியோக்கியாவிலிருந்தும் யூதர்கள் வந்து மக்களைத் தூண்டிவிட்டு, பவுல் மேல் கல் எறிந்தார்கள் அவர் இறந்து விட்டார் என்று எண்ணி நகருக்கு வெளியே அவரை இழுத்துப்போட்டார்கள்.சீடர்கள் அவரைச் சூழ்ந்து நின்றபோது அவர் எழுந்து நகரினுள் சென்றார். மறுநாள் அவர் பர்னபாவுடன் தெருபைக்குப் புறப்பட்டுச் சென்றார். அந்தநகரில் அவர்கள் நற்செய்தி அறிவித்துப் பலரைச் சீடராக்கிய பின் லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்குத் திரும்பி வந்தார்கள்.அங்குள்ள சீடர்களின் உள்ளத்தை அவர்கள் உறுதிப்படுத்தி, ”நாம் பலவேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்படவேண்டும்” என்றுகூறி நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்தார்கள்.அவர்கள் ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள். பின்பு பிசிதியா வழியாகப் பம்பிலியா வந்தார்கள்.பெருகை நகரில் இறைவார்த்தையை அறிவித்தபின் அத்தாலியா வந்தார்கள். அங்கிருந்து கப்பலேறி அந்தியோக்கியா வந்தார்கள் அங்குதான் அவர்கள் அருள்வழங்கும் கடவுளின் பணிக்கென்று அர்ப்பணிக்கப்பட்டார்கள். இப்போது அப்பணியைச் செய்து முடித்துவிட்டார்கள்.அவர்கள் அங்கு வந்ததும் திருச்சபையைக் கூட்டி, கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும், அவர் பிற இனத்தவர்க்கு நம்பிக்கை கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்ததையும் அறிவித்தார்கள்.அங்கே அவர்கள் சீடர்களுடன் பல நாள்கள் தங்கினார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நாங்கள் செய்பவற்றில் வெற்றி அருளும்

## நற்செய்தி: மத்தேயு 13:54– 58 (நற்செய்தி வேறுபடலாம்)

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக் கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், ”எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்?இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே? யாக்கோப்பு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?” என்றார்கள்.

இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள். இயேசு அவர்களிடம், ”தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்” என்றார். அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்குப் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**தியானம்:** இன்று அன்னை மரியாவின் வணக்க மாதத்தில் கால் பதிப்பதனால், எமது வீடுகளில் ஒவ்வொருநாளும் செபமாலை செபிப்போம். இன்று நாம் தொழிலாளர் தினத்தையும் நினைவுகூருவதனால், அனைத்துத் தொழிலாளர்களையம் ஆசிர்வதித்திடத் தொழிலாளரது பாதுகாவலர் புனித சூசைவழியாக வேண்டுதல் செய்வோம். இன்றைய நற்செய்தியில் இயேசு தமது சொந்த ஊரில் தொழுகைக்கூடத்தில் கற்பித்தனை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள் (மத்தேயு 13:54,57) என்று ஆரம்பிப்பதனை உற்று நோக்கலாம். அக்காலத்தில் இயேசுவின் போதனை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, ஏழைகளுக்கும், அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கும் வாழ்வின் அர்த்தத்தை அறிந்துகொள்ள உதவியது. ஆனால் படித்தவர்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும் இறுகிய மனத்தோடு இருந்ததால் அது எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இயேசுவின் செய்தியை அவர்கள் உள்வாங்காமல், இயேசுவின் கருத்துக்களில் பொதிந்திருக்கின்ற உண்மைதங்களின் வாழ்விலும் ஒளியேற்றும் என்று எதிர்பார்க்கவில்லை. மாறாக, அவர்கள் இயேசுவை விரோதியாக மட்டுமே பார்த்தனர். இவ்வாறு நாமும் செயல்படுவதில்லையா? ,உண்மையை அறிய மறுத்து பகைமையையும், வெறுப்பையும் அளவுகோலாக்கும் மனநிலை எம்மிடையே மேலோங்கியுள்ளதால், அடுத்தவரது கருத்துக்களது உண்மைத் தன்மையைப் பார்க்காமல், இறுகிய உள்ளத்தோடு செயற்படுவதனால் பலமனிதர்களால் கொடுக்கப்பட்ட இருளையே ஒளியாக மாற்றக்கூடிய போதனைகள் மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்படுவதில்லையா? மாற்றம் என்பது சிறிய நிலையிலிருந்து தொடங்குவதாகும். இதற்கு தொடக்கநூலில் ஆதாம் செய்த பாவத்தைச் சொல்லலாம். ஒருமனிதன் செய்த தவறு மனுக்குலத்திற்கு இழிவைத்தந்து. அருள்வாழ்வை இழப்பதற்கு காரணமாகிறது. இயேசு என்கிற ஒருமனிதரின் இறப்பு இந்த உலகத்திற்கே வாழ்வைப் பெற்றுத்தந்து மாற்றம் பெறமுடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. எனவே நாம் ஒவ்வொருவரும் இறையரசைக ̇கட்டியெழுப்ப நம்மையே அர்ப்பணம் செய்யவேண்டும். இயேசுவின் போதனை நம் உள்ளத்தைத் தொட்டு உருகவைக்கிறதா? மக்களின் நன்மைக்காக இயேசு புரிந்த அரும்செயல்கள் நம்மில் “நம்பிக்கை “என்னும் தீபத்தை ஏற்றிவைக்கிறதா? இவ்வாறான செய்தியையே அன்னைமரியா பாத்திமாவில் கூறினார்கள்.? அன்னைமரியாவை நாடுவோம். அனுதினமும் செபமாலைசெபிப்போம்.